# தக்காளி விற்பனையின் அனுபவம்



ஆ.மது
அரியலூர்
திருச்சி
அலைபேசி: 9655339117

என் பெயர் மது. நான் கடந்த 4 வருடங்களாக துல்லிய பண்ணைய விவசாய தொழில்நுட்பத்தின் மூலமாக 1.5 ஏக்கர் தக்காளி பயிர் செய்து வருகிறேன். நான் தக்காளியை அரியலூர், திருச்சி மற்றும் அருகில் உள்ள சந்தைகளில் விற்று வருகிறேன். நான் தக்காளி விற்பனையில் எனது அனுபவங்களை உங்களுடன் பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன்.

தினசரி சந்தை நிலவரம்

தினசரி சந்தை நிலவரம் தமிழ்நாடு வேளாண் பல்கலை கழகத்தின் வேளாண் விரிவாக்க துறை இயக்கத்தினால் உருவாக்கப்பட்ட மிகச் சிறந்த திட்டம் ஆகும். தமிழ்நாடு வேளாண் பல்கலை கழகத்தின் தினசரி சந்தை நிலவர சேவையின் மூலமாக எங்களின் பொருள்களை விற்பனை செய்வதில் அதிக தன்னம்பிக்கை அடைந்துள்ளோம்.

விற்பனை

இடைத்தரகர்களின் இடையூறுகளினால் என்னால் சந்தை பற்றிய விவரங்களை பெற முடிவதில்லை. இதன் காரணமாக எனது விளைபொருள்களை குறைந்த விலைக்கு விற்க வேண்டி இருந்தது. தினசரி சந்தை நிலவரத்தின் மூலமாக சந்தை தகவல்களை அறிந்த பின்பு எனக்கு எங்கு விற்பனை செய்வது எப்படி விற்பனை செய்வது என்பது பற்றிய தெளிவான விவரங்கள் எனக்கு தெரிந்தது. திருச்சி சந்தை ஆய்வாளர் மூலமாக எனது அலைபேசி எண்னை குறுந்தகவல் சேவையில் பதிவு செய்து கொண்டேன். நான் தக்காளிக்கு கோயமுத்தூர் மற்றும் கும்பகோணம் சந்தையின் தகவல்களை பெறுவதற்காக தேர்ந்தெடுத்துக் கொண்டேன்.

தமிழ்நாடு வேளாண் பல்கலை கழகத்தின் தினசரி சந்தை நிலவர திட்டத்தின் மூலம் திருச்சி சந்தையில் குறிப்பிட்டுள்ள விலைக்கே தற்பொழுது விற்று வருகிறேன். மேலும் எனது விளைபொருள்களை கும்பகோணம், தஞ்சாவூர், மற்றும் அருகில் உள்ள சந்தைகளிலும் விற்று வருகிறேன். இதன் மூலம் எனது

லாபம் கணிசமாக அதிகரித்துள்ளது. இப்பொழுது கும்பகோணம், தஞ்சாவூர் மற்றும் அருகில் உள்ள சந்தைகளில் விற்பதன் மூலமாக எனக்கு ரூ.14.00 / கிலோ செலவுகள் உட்பட என்ற அளவில் லாபம் வருகிறது.

எதிர்காலம்

நான் தமிழ்நாடு வேளாண் பல்கலை கழகத்தை இன்னும் அதிக சந்தைகளின் விலை நிலவரங்களை தருமாறு கேட்டுக்கொள்கிறேன். தற்பொழுது நான் வெவ்வேறு இடங்களில் நிறைய விளைபொருட்களை விற்று வருகிறேன். இந்த பெருமை அனைத்தும் தினசரி சந்தை நிலவர திட்டத்தினையும், தமிழ்நாடு வேளாண் பல்கலை கழகத்தையும் சேரும்.

தமிழக்த்தின் அதிக சந்தைகளின் விலை நிலவரங்களை அலைபேசியில் குறுந்தகவல்களாக அனுப்பினால் எங்களைப் போன்ற விவசாயிகளுக்கு நன்மை அளிப்பதாய் அமையும்.

இத்தகைய தகவல்கள் ஏராளமான விவசாயிகளுக்கு உதவியாக உள்ளது. இத்தகைய தகவல்களை வழங்குபவர்களின் பணி போந்நுவதற்குரியது.

தினசரி சந்தை நிலவர திட்டத்தினை அறிமுகப்படுத்திய தமிழ்நாடு வேளாண் பல்கலை கழகம் பற்றிய உன்னத கணிப்பியல் வளர்ச்சி மையம் ஆகியவற்றிற்கு எங்கள் இதயம் கனிந்த நன்றிகள்.